**CC.No. 432/2025 (JM.No.II, DHARMAPURI)**

**04.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரி ஆஜர்)**

**PW–6 : திரு. துறை, த/பெ. இரத்தினவேல்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பூரிக்கல்லில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 04 வருடங்களுக்கு முன்பு நான் காவல் நிலையம் சென்றபோது போலிசார் கேட்டுக்கொண்டததின் பேரில் கையெழுத்து செய்தேன். கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. **பார்வை மகஜரில் முதல் கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

கடந்த 21.09.2021 ம் வருடம் மாலை 04.30 மணிக்கு தொப்பூர் காவல் நிலையம் முன்பு போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அதில் சாட்சியாக இருந்து முதல் கையெழுத்து இட்டு தற்போது நான் கையெழுத்து இட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது எனவும் போலிசார் விசாரிக்கவில்லை என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u> –**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.04 17:30:36 +0530